# CHILD CARE



Child Care Worker / Child Care Provider / Early Childhood Care Assistant / Early Childhood Educator

## **Overview of the Career**

- Child Care focuses on the care, safety, and early learning of children (mainly 0–6 years).
- It supports children's physical, emotional, social, and cognitive development.
- Professionals work in Play Schools, Pre-Schools, Day Care Centres, Anganwadi Centres, NGOs, and home-based care.
- It is both a socially meaningful and employment-generating career with growing demand.



**Nature of Work & Job Responsibilities**

- Attend to daily needs: feeding, hygiene, rest, and supervision
- Conduct play-based and early learning activities
- Ensure child safety and a healthy environment
- Observe children's development and report progress to parents / supervisors
- Teach basic habits (cleanliness, sharing, discipline)
- Provide emotional support and positive engagement
- Maintain records and assist in classroom/day-care routines

**Educational Qualification Required**

- Minimum: 10th pass (for many certificate/skill courses)
- Preferred: 12th pass (for diploma and advanced programs)
- Entry also possible through vocational / skill development routes

**Skills Required**

- Love for children, patience, and empathy
- Communication and interpersonal skills
- Creativity (songs, stories, activities, crafts)
- Basic First Aid awareness
- Understanding of child behaviour and development
- Responsibility, observation, and safety consciousness

**Degree / Training / Certification / Professional Courses**

1. Certificate / Diploma in Early Childhood Care & Education (ECCE) – offered by **Indira Gandhi National Open University**
2. Child Care / Early Childhood Educator skill programs (CTS / NSQF aligned) – under **Directorate General of Training**
3. Nursery Teacher Training (NTT) / Montessori / Child Care Certificates – through government & private skill institutes



File No. DET-HO/262/2026-ASST(16) (Computer No. 442739)
Generated from eOffice by KAVIYARASU, ASST(A16)-THOA SEC- EW-HO-DET, ASSISTANT(A16)_THOA SECTION_EMPLOYMENT WING_HO_DET, DIRECTORATE OF EMPLOYMENT AND TRAINING on 13/05/202

4. Early Childhood & Child Development Programs – by **National Institute of Public Cooperation and Child Development**

**Colleges / Institutions & Available Courses**

| S. No | Name of the College / Institute | Available Courses | Official Website |
|---|---|---|---|
| 1 | IGNOU | Certificate / Diploma in ECCE | https://www.ignou.ac.in |
| 2 | ITIs / Skill Centres (under DGT) | Child Care / Early Childhood Courses | https://www.dgt.gov.in |
| 3 | NIPCCD | ECCE / Child Development Programs | https://www.nipccd.nic.in |
| 4 | Private Teacher Training Institutes | NTT / Montessori / Child Care | www.asianeducation.com<br>https://royaleinstitution.com<br>https://nctaindia.in |

**Job Profiles with Average Salary**

- Child Care Provider / Day Care Assistant – ₹8,000 to ₹15,000 per month
- Pre-School / Play School Assistant Teacher – ₹10,000 to ₹20,000 per month
- Early Childhood Educator – ₹15,000 to ₹30,000 per month
- Centre Supervisor / Coordinator – Higher, based on experience

*(Salaries vary by city, employer, and experience.)*

**Job Opportunities**

**Government Sector**

- Anganwadi Centres
- Integrated Child Development Services (ICDS) projects
- Social Welfare & Women and Child Development Departments

**Private Sector**

- Play Schools / Pre-Schools
- Day Care Centres
- Private Nursery Schools
- Child Development & Learning Centres

**Entrepreneurship / Internships**

- Start a home-based Day Care
- Open a Play School / Pre-School (with required approvals)
- Internships in NGOs, Anganwadis, and early learning centres.

**List of Internships**

1. **Government Internship (Women & Child Development Ministry)**

The Ministry of Women and Child Development (MWCD) runs an official internship program connected to schemes like ICDS and Anganwadi.

**Details:**

- Duration: 2 months
- Batches: May–June, Aug–Sep, Nov–Dec, Feb–Mar

**Eligibility:**

- Students / scholars / social activists / teachers
- Age 21–40 years
- Purpose: Work on projects, field studies, and policy research related to women and child development.
- Interns may visit Anganwadi centres, study nutrition programs, preschool education, etc.

**How to apply**

- Apply online through the WCD internship portal
- Selection is done by a committee reviewing applications.

2. **University / Social Work Internship**

This is actually the most common way.

Students from courses like:

- Social Work (MSW / BSW)

- Public Health
- Nutrition
- Rural Development
- Sociology / Development Studies

are sent by their college to Anganwadi centres or ICDS offices for fieldwork. Applications usually come through universities or HOD recommendations.

**Tasks include:**

- Preschool activity support
- Nutrition survey
- Child growth monitoring studies
- Community awareness programs

### 3. NGO / Research Internship

Some NGOs working in nutrition, child development, or ICDS evaluation recruit interns and place them in Anganwadi centres for fieldwork.

**Typical NGOs**

- Nutrition programs
- Early childhood education NGOs
- Public policy research groups

### 4. Regular Anganwadi Recruitment (Not Internship)

If someone wants to work directly in Anganwadi, they usually apply for posts like:

- Anganwadi Worker
- Anganwadi Helper
- Supervisor

These are state government recruitments, often for local women from the same area.

## NCO Code (as per NESM / NCO Classification)

**NCO Codes (commonly used for Child Care roles):**

- **5311.0100** – Child Care Workers, Ayah, Governess
- **5311.0200** – Child Care Workers, Ayah, Governess
- **5311.0400** – Child Care Workers

## Conclusion

- Child Care is a people-centred profession that shapes children's early years.
- Multiple entry pathways exist: certificates, diplomas, and skill programs.
- Employment is available in government, private institutions, and self-employment.
- With rising nuclear families and working parents, demand for trained Child Care professionals continues to grow.



File No. DET-HO/262/2026-ASST(16) (Computer No. 442739)
Generated from eOffice by KAVIYARASU, ASST(A16)-THOA SEC- EW-HO-DET, ASSISTANT(A16)_THOA SECTION_EMPLOYMENT WING_HO_DET, DIRECTORATE OF EMPLOYMENT AND TRAINING on 13/05/202

# குழந்தை பராமரிப்பு தொழில் வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்பு வாய்ப்புகள்



தொழில் பெயர்:

குழந்தை பராமரிப்பு பணியாளர் / குழந்தை பராமரிப்பு வழங்குநர் / ஆரம்பகால குழந்தை பராமரிப்பு உதவியாளர் / ஆரம்பகால குழந்தை பருவ கல்வியாளர்.

தொழில் முன்னுரை / கண்ணோட்டம்:

- குழந்தை பராமரிப்பு என்பது குழந்தைகளின் (முக்கியமாக 0–6 வயது) கவனிப்பு, பாதுகாப்பு மற்றும் ஆரம்பகால கற்றல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இது குழந்தைகளின் உடல், மனஉணர்ச்சி, சமூக மற்றும் அறிவாற்றல் வளர்ச்சிக்குத் துணைபுரிகிறது.
- தொழில் வல்லுநர்கள் விளையாட்டுப் பள்ளிகள், மழலையர் பள்ளிகள், பகல் நேரப் பராமரிப்பு மையங்கள், அங்கன்வாடி மையங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வீட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஆகியவற்றில் பணியாற்றுகிறார்கள்.
- இது சமூக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கும் ஒரு தொழிலாகும், மேலும் இதற்குத் தேவையும் அதிகரித்து வருகிறது.



பணியின் தன்மை மற்றும் வேலைப் பொறுப்புகள்:

- தினசரி தேவைகளைக் கவனித்தல்: உணவு ஊட்டுதல், சுகாதாரம், ஓய்வு மற்றும் மேற்பார்வை.
- விளையாட்டு அடிப்படையிலான மற்றும் ஆரம்பகால கற்றல் செயல்பாடுகளை நடத்துதல்.
- குழந்தைகளின் பாதுகாப்பையும் ஆரோக்கியமான சூழலையும் உறுதி செய்தல்.
- குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணித்து, அதன் முன்னேற்றத்தைப் பெற்றோர்/மேற்பார்வையாளர்களுக்குத் தெரிவித்தல்.
- அடிப்படைப் பழக்கங்களைக் கற்றுக் கொடுத்தல் (சுத்தம், பகிர்ந்துகொள்ளுதல், ஒழுக்கம்).
- உணர்ச்சிபூர்வமான ஆதரவையும் நேர்மறையான ஈடுபாட்டையும் வழங்குதல்.
- குழந்தை குறித்த விவர பதிவுகளைப் பராமரித்தல் மற்றும் வகுப்பறை/பகல்நேரப் பராமரிப்பிற்கு உதவுதல்.

தேவையான கல்வித் தகுதி:

- குறைந்தபட்சம்: 10 ஆம் வகுப்பு தேர்ச்சி (பல சான்றிதழ்/திறன் படிப்புகளுக்கு).
- முன்னுரிமை: 12 ஆம் வகுப்பு தேர்ச்சி (பட்டயம் மற்றும் உயர் படிப்புகளுக்கு).

- தொழிற்கல்வி / திறன் மேம்பாட்டு கல்வி மூலமாகவும் பணி சாத்தியமாகும்.

திறன்கள் தேவை:

- குழந்தைகள் மீதான அன்பு, பொறுமை மற்றும் அனுதாபம்.
- தொடர்பு மற்றும் தனிப்பட்ட தொடர்பு திறன்கள்.
- படைப்பாற்றல் (பாடல்கள், கதைகள், செயல்பாடுகள், கைவினைப் பொருட்கள்).
- அடிப்படை முதலுதவி குறித்த விழிப்புணர்வு.
- குழந்தை நடத்தை மற்றும் வளர்ச்சி பற்றிய புரிதல்.
- பொறுப்பு, கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உணர்வு.

பட்டப்படிப்பு / பயிற்சி / சான்றிதழ் / தொழில்முறைப் படிப்புகள்:

- மழலைப் பருவப் பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE) சான்றிதழ் / பட்டயப் படிப்பு – இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகிறது.
- குழந்தை பராமரிப்பு / மழலையர் கல்வி பயிற்றுவிப்பாளர் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் (CTS / NSQF உடன் இணைந்தவை) – பயிற்சி இயக்குநரகத்தின் கீழ் வழங்கப்படுகிறது.
- மழலையர் பள்ளி ஆசிரியர் பயிற்சி (NTT) / மான்டெசோரி / குழந்தை பராமரிப்பு சான்றிதழ்கள் – அரசு மற்றும் தனியார் திறன் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக.
- தேசிய பொது ஒத்துழைப்பு மற்றும் குழந்தை மேம்பாட்டு நிறுவனம் வழங்கும் குழந்தைப்பருவம் மற்றும் குழந்தை வளர்ச்சித் திட்டங்கள்.

கல்லூரிகள் / நிறுவனங்களால் மற்றும் வழங்கப்படும் படிப்புகள்:

| வ. எண் | கல்லூரியின் / நிறுவனத்தின் பெயர் | கிடைக்கப்பெறும் பாடநெறிகள் | இணையதளம் |
|---|---|---|---|
| 1 | இந்திரா காந்தி தேசிய பல்கலைக்கழகம் | சான்றிதழ் / பட்டயம் மழலைப்பருவ பராமரிப்பியல் கல்வி(ECCE). | https://www.ignou.ac.in |
| 2 | ஐ.டி.ஐ.க்கள் / திறன் மையங்கள் (டி.ஜி.டி.யின் கீழ்) | குழந்தை பராமரிப்பு / மழலைப்பருவ பராமரிப்பு படிப்புகள் | https://www.dgt.gov.in |
| 3 | NIPCCD | ECCE / குழந்தை வளர்ச்சித்திட்டங்கள் | https://www.nipccd.nic.in |
| 4 | தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | NTT / மான்டெசோரி /குழந்தை பராமரிப்பு | www.asianeducation.com<br>https://royaleinstitution.com<br>https://nctaindia.in |

சராசரி சம்பளத்துடன் பணி விவரங்கள்:

- குழந்தை பராமரிப்பாளர் / பகல் நேரப் பராமரிப்பு உதவியாளர் – மாதத்திற்கு ₹8,000 முதல் ₹15,000 வரை.
- மழலையர் பள்ளி / விளையாட்டுப் பள்ளி உதவி ஆசிரியர் – மாதத்திற்கு ₹10,000 முதல் ₹20,000 வரை.
- மழலையர் கல்வி பயிற்றுநர் – மாதத்திற்கு ₹15,000 முதல் ₹30,000 வரை.
- மைய மேற்பார்வையாளர் / ஒருங்கிணைப்பாளர் – அனுபவத்தின் அடிப்படையில் தரமான ஊதியம்.

  (பணியிடம், வேலையளிப்பவர் மற்றும் அனுபவத்தைப் பொறுத்து ஊதியம் மாறுபடும்.)

அரசுத்துறை வேலை வாய்ப்புகள்:

- அங்கன்வாடி மையங்கள்
- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி சேவைகள் (ICDS) திட்டங்கள்.
- சமூக நலன் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறைகள்.

தனியார் துறை:

- விளையாட்டுப் பள்ளிகள் / மழலையர் பள்ளிகள்
- பகல் நேரப் பராமரிப்பு மையங்கள்.
- தனியார் மழலையர் பள்ளிகள்.
- குழந்தை வளர்ச்சி மற்றும் கற்றல் மையங்கள்.

தொழில்முனைவு / உள்ளகப்பயிற்சி (INTERNSHIP):

- வீட்டிலிருந்து பகல் நேரப் பராமரிப்பு மையத்தைத் தொடங்குதல்
- தேவையான அனுமதிகளுடன் விளையாட்டுப் பள்ளி / மழலைப்பள்ளிகள் நடத்துதல்
- தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அங்கன்வாடிகள் மற்றும் ஆரம்பக் கல்வி மையங்களில் பயிற்சிகள்.

உள்ளகப்பயிற்சிகள் (Interships)

1. அரசு உள்ளகப்பயிற்சி (பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்)

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் (MWCD), ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் (ICDS) மற்றும் அங்கன்வாடி போன்ற திட்டங்களுடன் தொடர்புடைய ஒரு அதிகாரப்பூர்வ உள்ளகப் பயிற்சித் திட்டத்தை நடத்துகிறது.

விவரம்:

காலம்: 2 மாதங்கள்

வகுப்பு காலம்: மே-ஜீன், ஆகஸ்ட்–செப்டம்பர், நவம்பர்–டிசம்பர், பிப்ரவரி–மார்ச்

தகுதி:

மாணவர்கள் / அறிஞர்கள் / சமூக ஆர்வலர்கள் / ஆசிரியர்கள்

வயது: 21–40 வருடங்கள்

தேவை: பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு தொடர்பான திட்டங்கள், கள ஆய்வுகள் மற்றும் கொள்கை ஆராய்ச்சிகளில் பணியாற்றுதல். பயிற்சியாளர்கள் அங்கன்வாடி மையங்களைப் பார்வையிடலாம், ஊட்டச்சத்துத் திட்டங்கள், மழலைக் கல்வி போன்றவற்றைப் படிக்கலாம்.

எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்:

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் (WCD) உள்ளகப் பயிற்சி இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்யும் ஒரு குழுவால் தேர்வு செய்யப்படுகிறது.

2. பல்கலைக்கழகம் / சமூகப் பணி உள்ளகப் பயிற்சி

இதுதான் மிகவும் பொதுவான வழி.

கீழ்காணும் படிப்புகளைச் சேர்ந்த மாணவர்கள்:

- சமூகப் பணி (முதுகலை சமூக பணி(MSW) / இளநிலை சமூக பணி BSW) பொது சுகாதாரம்
- ஊட்டச்சத்து
- கிராமப்புற வளர்ச்சி
- சமூகவியல் / வளர்ச்சி ஆய்வுகள்

மாணவர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து களப்பணிக்காக அங்கன்வாடி மையங்களுக்கோ அல்லது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி

சேவைகள் (ICDS) அலுவலகங்களுக்கோ அனுப்பப்படுகிறார்கள். விண்ணப்பங்கள் பொதுவாக பல்கலைக்கழகங்கள் அல்லது துறைத் தலைவர் பரிந்துரைகள் மூலமாக வருகின்றன.

அடங்கும் பணிகள்:

- மழலைப்பள்ளி செயல்பாட்டு ஆதரவு
- ஊட்டச்சத்து கணக்கெடுப்பு
- குழந்தை வளர்ச்சி கண்காணிப்பு ஆய்வுகள்
- சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

3. அரசு சாரா நிறுவனம்(NGO) / ஆராய்ச்சிப் பயிற்சி

ஊட்டச்சத்து, குழந்தை வளர்ச்சி அல்லது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட (ICDS) மதிப்பீடு போன்ற துறைகளில் பணிபுரியும் சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பயிற்சியாளர்களைத் தேர்வுசெய்து, அவர்களை களப்பணிக்காக அங்கன்வாடி மையங்களில் நியமிக்கின்றன.

- பொதுவான அரசு சாரா நிறுவனங்கள்
- ஊட்டச்சத்து திட்டங்கள்
- மழலைக் கல்வி அரசு சாரா நிறுவனங்கள்
- பொது கொள்கை ஆராய்ச்சி குழுக்கள்

4. வழக்கமான அங்கன்வாடி ஆட்சேர்ப்பு (பயிற்சி அல்ல)

யாரேனும் அங்கன்வாடியில் நேரடியாகப் பணியாற்ற விரும்பினால், அவர்கள் பொதுவாக பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்:

- அங்கன்வாடிப் பணியாளர்
- அங்கன்வாடி உதவியாளர்
- மேற்பார்வையாளர்

இவை மாநில அரசின் ஆட்சேர்ப்புகள் ஆகும், பெரும்பாலும் அதே பகுதியைச் சேர்ந்த உள்ளூர் பெண்களுக்காக நடத்தப்படுகின்றன.



File No. DET-HO/262/2026-ASST(16) (Computer No. 442739)
Generated from eOffice by KAVIYARASU, ASST(A16)-THOA SEC- EW-HO-DET, ASSISTANT(A16)_THOA SECTION_EMPLOYMENT WING_HO_DET, DIRECTORATE OF EMPLOYMENT AND TRAINING on 13/05/202

NCO குறியீடு (NESM / NCO வகைப்பாட்டின்படி):

NCO குறியீடுகள் (பொதுவாக குழந்தை பராமரிப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுபவை):

- 5311.0100 – குழந்தைகள் பராமரிப்பாளர்கள், ஆயா, ஆசிரியை
- 5311.0200 – குழந்தைகள் பராமரிப்பாளர்கள், ஆயா, ஆசிரியை
- 5311.0400 – குழந்தைகள் பராமரிப்பாளர்கள்.

(பணியமர்த்துபவர்கள்/இணையதளங்களைப் பொறுத்து குறியீடுகள் சற்றே வித்தியாசமாக வரையறுக்கப்படலாம், ஆனால் இவை பொதுவாகக் குழந்தை பராமரிப்புத் தொழில்களை உள்ளடக்கியுள்ளவை.)

முடிவுரை:

- குழந்தை பராமரிப்பு என்பது குழந்தைகளின் வளர்ச்சி ஆண்டுகளை வடிவமைக்கும், மக்களை மையமாகக் கொண்ட ஒரு தொழிலாகும்.
- சான்றிதழ்கள், பட்டயங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் எனப் பல நுழைவு வழிகள் உள்ளன.
- அரசு, தனியார் நிறுவனங்கள் மற்றும் சுயதொழில் ஆகியவற்றில் வேலைவாய்ப்புகள் உள்ளன.
- அதிகரித்து வரும் தனிக்குடும்பங்கள் மற்றும் பணிபுரியும் பெற்றோர்களால், பயிற்சி பெற்ற குழந்தை பராமரிப்பு நிபுணர்களுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.



File No. DET-HO/262/2026-ASST(16) (Computer No. 442739)
Generated from eOffice by KAVIYARASU, ASST(A16)-THOA SEC- EW-HO-DET, ASSISTANT(A16)_THOA SECTION_EMPLOYMENT WING_HO_DET, DIRECTORATE OF EMPLOYMENT AND TRAINING on 13/05/202